## இயற்பியல்

1. எந்த மின்கலம் வெப்பம் உயரும் போது இணைப்பு துண்டிக்கப்பட்டு, குளிர்ந்த நிலையில் மீண்டும் இயங்கத் தொடங்கும்?
(A) சோடியம் அயனி
**(B) லித்தியம் அயனி**
(C) கார்பன் அயனி
(D) பொட்டாசியம் அயனி

2. முயலின் செவியுணர் நெடுக்கம்
(A) 100 – 32,000 Hz
(B) 1,000 – 1,50,000 Hz
**(C) 1,000 – 1,00,000 Hz**
(D) 900 – 2,00,000 Hz

## வேதியியல்

3. DDT-யின் வேதிப்பெயர் என்ன?
**(A) டைகுளோரோ டைபீனைல் டிரைகுளோரோ ஈத்தேன்**
(B) டைகுளோரோ டைபீனைல் டிரைபுரோமோ ஈத்தேன்
(C) டைபீனைல் டைகுளோரோ டிரைகுளோரோ ஈத்தேன்
(D) டைபீனைல் டைபுரோமோ டிரைகுளோரோ ஈத்தேன்

4. காய்கறிகள் மற்றும் பழங்களை வெட்டி வைக்கும் போது பழுப்பு நிறமாக மாறுவதேன்?
**(A) காற்றிலுள்ள ஆக்ஸிஜன் மற்றும் பீனாலிக் சேர்மம் வினைபுரிவதால்**
(B) கனிம வேதிப்பொருள்கள் உருவாவதால்
(C) உப்புக்கள் உருவாவதால்
(D) காரங்கள் உருவாவதால்

5. பின்வருவனவற்றில் எது உயிரி-உரம் அல்ல?
(A) அனபீனா (B) நாஸ்டாக்
**(C) லின்டேன்** (D) ரைசோபியம்

## விலங்கியல்

6. வரிசை I உடன் வரிசை IIயை பொருத்துக:

| வரிசை I | வரிசை II |
|---|---|
| (a) கிளைக்காலிஸிஸ் | 1. ஆக்ஸிஜன் பயன்படுத்தப்படுவதில்லை |
| (b) கிரெப் சுழற்சி | 2. ATP-க்கள் உருவாகிறது |
| (c) எலக்ட்ரான் கடத்தல் சங்கிலி | 3. பைருவிக் அமில ஆக்ஸிஜனேற்றம் |
| (d) நொதித்தல் | 4. சைட்டோபிளாசத்தில் நடைபெறுகிறது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| **(B)** | **4** | **3** | **2** | **1** |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

7. மைக்ரோஸ்போரம், எபிடெர்மோப்பைட்டான் யாவை?
(A) மனிதனில் நோய் ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள்
**(B) மனிதனில் நோய் ஏற்படுத்தும் பூஞ்சைகள்**
(C) மனிதனில் நோய் ஏற்படுத்தும் வைரஸ்கள்
(D) மனிதனில் நோய் ஏற்படுத்தும் புரோட்டோசோவாக்கள்

8. கீழ்கண்ட கூற்றுகளை கவனி:
1. இனப்பெருக்கச் செயல் குறைபாடு (மலட்டுத் தன்மை) வைட்டமின் K குறைவினால் ஏற்படுகிறது.
2. மாலைக்கண் நோய் வைட்டமின் D குறைவினால் ஏற்படுகிறது.

**(A) (a) மற்றும் (b) தவறானவை**
(B) (a) தவறு மற்றும் (b) சரி
(C) (a) சரி மற்றும் (b) தவறு
(D) (a) மற்றும் (b) சரியானவை

9. வலது வெண்ட்ரிக்களிலிருந்து (இதயக் கீழறை) நுரையீரல் இரத்தம் செல்வதை ஒழுங்குபடுத்தும் வால்வின் (அடைப்பான்) பெயர்

**(A) பிறைசந்திர வால்வு**
(B) ஆரிக்குலோ வென்ட்ரிக்குலார் வால்வு
(C) ஈரிதழ் வால்வு
(D) மூவிதழ் வால்வு

10. "மருந்துகளின் இராணி" என அழைக்கப்படும் மருந்து பொருள் எது?
(A) அட்ரோபின் (B) பாலிமிக்சின்
(C) ஸ்ட்ரெப்டோமைசின் **(D) பெனிசிலின்**

11. அண்டம் விடுபடுதலைத் தூண்டுதம் ஹார்மோன்
**(A) LH** (B) LTH
(C) ரெனின் (D) அட்ரீனலின்

## தாவரவியல்

12. கஸ்க்யூட்டா, விஸ்கம் போன்ற தாவரங்களில் காணப்படும் சிறப்பான வேர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
(A) வேரிகள்
**(B) ஹாஸ்டோரியாக்கள்**
(C) ஹைப்பாக்கள்
(D) ஸ்டோலன்

13. முடக்கு வாதத்தை சரி செய்யப் பயன்படும் ஜிம்னோஸ்பெர்ம் தாவரம் எது?
(A) அரக்கேரியா (B) எபிட்ரா
**(C) நீட்டம்** (D) பைனஸ்